S-1

# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## இரண்டாம் ஆண்டு – நான்காம் பருவம்

## ஜனவரி–பிப்ரவரி 2026
## P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் உள்ள அனைத்து வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. Epic என்ற ஆங்கிலப் பதத்தின் தமிழ்ச்சொல் யாது?
2. சீவக சிந்தாமணியின் ஆசிரியர் யார்?
3. கம்பரை ஆதரித்த வள்ளல் யார்?
4. திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்படும் நூல் எது?
5. திவிட்டன் எக்காப்பியத் தலைவன்?
6. பாஞ்சாலியைக் கண்ட மக்களின் புலம்பல் எத்தகையது என்கிறார் பாரதி?
7. தமிழில் நமக்குக் கிடைத்த முழுமையான முதல் இலக்கண நூல் எது?
8. கண்ணப்ப நாயனாரின் வேறு பெயர் யாது?
9. வாணிதாசனின் கொடி முல்லை எத்தகைய காப்பியம்?
10. மாங்கனி எக்குலத்தைச் சார்ந்தவள்?
11. திணை என்றால் என்ன?
12. பாடப்படும் ஆண்மகனது ஒழுகலாறுகளைக் கூறும் திணை எது?
13. ஆநிரை மீட்டல் எத்திணையின் பாற்படும்?
14. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்ற மலர் வகைகள் எத்தனை?
15. முத்தொள்ளாயிரம் எத்திணை நூல்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக. (5x3=15)**

16. ஐஞ்சிறு காப்பியங்கள் எவை?
17. கம்பர் இயற்றிய பிற நூல்களைக் குறிப்பிடுக.
18. எட்டுத் தொகையில் அகப்புற நூல் எது? ஏன்?
19. பத்துப்பாட்டில் இடம்பெற்றுள்ள அகநூல்கள் எத்தனை? அவையாவை?
20. பாஞ்சாலியின் சபதம் யாது?
21. முப்பொருட்கள் எவை?
22. ஆற்றுப்படை நூல்கள் எவை?
23. முல்லை நிலத்திற்குரிய முதற்பொருளைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக. (3x15=45)**

24. (அ) இரட்டைக் காப்பியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) கம்பராமாயணத்தின் கங்கைப் படலம் குறித்துத் தொகுத்துரைக்க

25. (அ) நும் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள பகுத்தறிவுச் சிந்தனைக் காப்பியங்கள் குறித்து விவரி.

(அல்லது)

(ஆ) சங்க அகநூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

26. (அ) ஆற்றுப்படை நூல்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) கைக்கிளை, பெருந்திணை குறித்து விவரி.

❋ ❋ ❋